REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 265

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: சித்திரை 9௳ புதன் (21—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 10௳ வியாழன் (22—4—54)

வட நாட்டின் வளத்திற்கே ஐந்தாண்டு திட்டம் வழிகோலுகிறது!

முக்கால் பகுதி செலவு அதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது

மொழி என்பதற்காக இந்தியை திராவிடர் எதிர்க்கவில்லை

தங்கள் மொழி, கலை, நாகரீகம் சீர்கெடுமே என்ற அச்சமே காரணம்

புதுடில்லி, ஏப். 20—

"ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் முக்கால் பகுதியை, வட நாட்டின் வளத்திற்கே செலவழிக்கும் நிலை இருந்து வருகிறது; பெருந்தொகையை மூதலீடாக வட நாட்டில் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை நிதி அமைச்சர்கூட ஒப்புக்கொண்டுள்ளார்."

"இந்தி ஒரு மொழி என்பதற்காக திராவிடர்களாகிய நாங்கள் அதை எதிர்க்கவில்லை. தேசியம், நாட்டுப் பற்று, ஏக இந்தியா எனப் புகலாகக் கூறிக்கொண்டு எங்கு இந்தி மொழி, எங்களுடைய மொழி கலை, நாகரீகம் முதலானவற்றைக் கெடுத்து விடுமோ எனவும், வட இந்தியக் கலையும் நாகரீகமும் எங்கள் வாழ்க்கையில் ஊடுருவி விடுமோ எனவும் அச்சம் கொண்டிருப்பதன் விளைவாகவே, நாங்கள் இந்தியை எதிர்க்கிறோம்",

—என்று சுயேச்சை உறுப்பினரான வி. வீராசாமி அவர்கள் மக்கள் சபையில் எடுத்துக்காட்டினார்.

அவர் மேலும் பேசும்பொழுது பாக்கு, சோம்பு துணி சோப்பு முதலியவைகளுக்கு யூனியன் அரசாங்கம் போட்டப்பட்டுள்ள வரிகளால் சாதாரண ஏழை மக்களே பாதிக்கப்படுவர் என்றும், வளர்ந்து வரும் வேலையின்மையைப் போக்க அரசாங்கம் ரூபாய் பத்து கோடியை ஒதுக்கவேண்டும் என்றும், ஏழை மக்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து தருவதற்காக ரூ. 100 கோடி செலவிட அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும், குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு இடமில்லை!

நியூயார்க், ஏப். 20—

ஆயுதப் பரிகரண உபகமிட்டியில், இந்தியா, சைனா, செக் ஆகிய நாடுகளைச் சேர்க்க வேண்டுமென்ற சோவியத் பிரேரணையை ஐ. நா. ஆயுதப் பரிகரண கமிஷன் நிராகரித்து விட்டது.

டல்லஸ் திட்டம்

"சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்கும்!"

சோவியத் பத்திரிகை கருத்து

மாஸ்கோ, ஏப். 20—

தென்கிழக்கு ஆசியாவில் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டல்லஸ் கொண்டுள்ள திட்டம் "ஆசிய மக்களின் தேசிய சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்கி, தங்களுடைய குடியேற்ற நாடுகளைப் பாதுகாப்பதேயாகும்," என்று சோவியத் பத்திரிகை ஒன்று கூறுகிறது.

* * *

பிரிட்டன் யோசனை!

லண்டன், ஏப். 20—

தென்கிழக்கு ஆசிய கூட்டுக் காப்பு ஒப்பந்த யோசனைப் பற்றி இந்தியா—பாகிஸ்தான்—இலங்கை ஆகிய நாடுகளுடன் பிரிட்டன் கலந்தாலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

முஸ்லிம் லீகில் மந்திரிகளுக்கு இடமில்லை

காரச்சி, ஏப் 20—

மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் மந்திரிகள் முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தில் நிர்வாகப் பதவிகளை இனி வகிக்கக் கூடாதென்று பாக் முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி தீர்மானித்துள்ளது. ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதே இதற்குக் காரணமாம்!

தீ விபத்தில் வெந்து மாண்டார்

பெங்களூர், ஏப். 20—

நகரின் முக்கியப் பகுதியில் சினிமா பிலிம்கள் வைக்கப்பட்டிருந்த ஒரு மாடிக் கிடங்கு ஒன்று தீ விபத்துக்குள்ளானது. அதற்குள் தூங்கிக் கொண்டிருந்த ஒருவர் வெந்து மாண்டார். கிடங்கின் காங்கிரீட் மாடி அப்படியே உட்கார்ந்து விட்டது. தீ அணைக்கும் எஞ்சின்கள் 8 மணி நேரம் போராடி தீயை அணைத்தன.

115 வீடுகள் தீக்கிரை

முசாபர்பூர், ஏப். 20—

முசாபர்பூர் மாவட்டத்தில் ஏற்பட்ட பெரியதோர் தீ விபத்தில் மொத்தம் 115 வீடுகள் தீக்கிரையாகி விட்டன. ஒரு கட்டடத்தில், சர்க்காருக்குச் சொந்தமான ரூ 40,000 கரன்சி நோட்டுகளும், வேறொருவரின் ரூ 10,000-மும் எரிந்து சாம்பலாயின. கிடங்குகளில் இருந்த தானியங்களும், அருகேயுள்ள வயலில் வைக்கப்பட்டிருந்த ராபி பயிரும் அழிந்தன; பல லட்சம் ரூபாய்களுக்கு மேல் சொத்து நாசம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கோயில் சொத்து நாட்டின் செல்வம்'

'தொழில் வளர அதைச் செலவிடுக'

புதுடில்லி, ஏப். 20—

"ஆலயங்களிலே முடங்கிக் கிடக்கும் சொத்துக்களை தேசத்தின் பொதுச் சொத்தாகக் கொள்ள வேண்டும்; அவைகளை நாட்டின் செல்வ பெருக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டும்,"

—என்று, வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது மக்கள் சபையில், ஐதராபாத் காங்கிரஸ் உறுப்பினரான டாக்டர் டி. என். பத்ரிகார் ஆலோசனை கூறினார்.

பாரிஸ் இணங்கி வருகிறது?

பிரெஞ்சிந்தியத் தகாறில் சமரசம் காண பிரதமர் முயற்சி

புதுடில்லி, ஏப். 21—

பிரெஞ்சிந்தியப் பகுதிகள் சம்பந்தமாக பிரெஞ்சுப் பிரதம மந்திரி லானியெல் எழுதிய ஒரு கடிதம் பிரதம மந்திரி நேருவிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகளின் எதிர்காலம் குறித்து ஒரு சமரசப் பரிகாரம் தெரிவித்து, லானியல் சொந்த முறையில் கடிதம் எழுதியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சர்வதேச மேற்பார்வையில் ஒரு வாக்கெடுப்பு நடத்தாமல் பிரெஞ்சிந்தியப் பகுதிகளை இந்தியாவுடன் இணைக்க முடியாதென பிரான்ஸ் முன்பு தெரிவித்திருக்கிறது. அந்த நிலைமை, பிரெஞ்சுப் பிரதமரின் போக்கால் மாறிவிடக் கூடும்!

'தொழில் திட்டங்கள் நிறைவேற அரசர் உடைமைகளை ஈடு செய்க'

'அவ்வகையில் 900 கோடி ரூபாய் வரை கிடைக்கும்'

புதுடில்லி, ஏப். 20—

"முன்னேற்றத் திட்டங்களுக்கான பணத்தைச் சரிகட்ட, அரசர்களிடம் வீணாகத் தேங்கிக் கிடக்கும் உடைமைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும். அரசர்களிடமும், மற்றச் செல்வந்தர்களிடமும் தஞ்சம் புகுந்திருக்கும் பொன், வெள்ளி பொருட்களையும், விலை உயர்ந்த கற்களையும், ஐந்தாண்டு காலத்திற்கு எடுத்துக்கொண்டு, அவைகளை தேசியக் கடன் பத்திரங்களாக மாற்றிக்கொள்ள வேண்டும்; இந்த வகையை அரசாங்கம் பின்பற்ற முனையுமானால், ரூ 800 கோடியிலிருந்து ரூ. 900 கோடி வரையில் சுலபமாகக் கிடைக்க வழி பிறக்கும்; அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளும் சொத்துக்களுக்குப் பதிலாகக் கடன் பத்திரங்கள் தரப்படுவதால், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன என்பதற்கு இடமே கிடையாது",

—என்று, மக்கள் சபையில், வரவு-செலவு திட்டத்தின்மீது பேசிய உத்திரப் பிரதேச காங்கிரஸ் உறுப்பினர் ஜெயி சரண் ஜெய்ன் அவர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்தார்.

பம்பாய், ஏப் 20—

தபால் மூலம் அனுப்பப்படும் கவர்கள் குறைந்தபட்சம் 4 அங்குல நீளமும், இரண்டேமுக்கால் அங்குல அகலமும் இருக்க வேண்டுமென சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

இறக்குமதித் தடையைத் தளர்த்தினால் பாக்குத் தொழில் நசிக்கும்

உற்பத்தியும், உபயோகமும் — தென்னாட்டில்தான் அதிகம்

புதுடில்லி, ஏப். 20—

"பாக்கை உபயோகிப்போர் தொகை, நாட்டின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் தென்னிந்தியாவில்தான் அதிகம். நாட்டில் உற்பத்தியாகும் மொத்தப் பாக்கில் 90 சத விகிதம் தென்னாட்டில் உற்பத்தியாகிறது,"

வன, மக்கள் சபையில், மேற்கு வங்காள காங்கிரஸ் உறுப்பினரான பி. கே. தாஸ் அவர்கள் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

"பாக்கு இறக்குமதித்தடையைத் தளர்த்துவதினால், நாட்டில் தெற்கே உள்ள பாக்கு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவர் என அவர்கள் அஞ்சுகின்றனர். உற்பத்தியாளர்களுக்கும், பாக்கை உபயோகிப்பவர்களுக்கும் நன்மை பயக்கும் முறையில் ஒரு இடைவழிக் கொள்கையை நிதி மந்திரி மேற்கொள்ள முன்வர வேண்டும்."

நம் நாடு

சென்னை 21—4—54 புதன்

கம்பன் செய்த வம்பு!

'கவிக்கொரு புலவன் கம்பன்', 'கவிபாசர் கம்பர்' என்றெல்லாம் பாராட்டுகிறார்கள். கம்பன் கவியில் அணியும், பொருளும், பொருத்தமும் ஏராளமாக உள்ளன என்பதை மறுப்பவர் இல்லை.

அவள் ஒரு கட்டழகி; முப்பத்திரண்டு இலட்சணமும் பொருந்தினவள்; அவளுக்கு இருப்பது கருமேகக் கூந்தல்; வில் ஒத்த புருவம்; வேலை நிகர்த்த விழி; முத்துப் பல் வரிசை; கொவ்வைக் கனி வாய்; அன்றலர்ந்த செந்தாமரை முகம்; அவள் கொஞ்சுமொழி தேமதுர இசையமுது!

ஆடவரேயன்றி பருவப் பெண்டிரும், அவளைக் கண்டால் காமுறுவர்; தன்னிலையிழந்து தவித்துத் தடுமாறுவர்!

அத்தகு விசித்திர வனிதையின் அழகு வர்ணனையில் நமக்கு ஐயமுமில்லை; அதை மறைத்துக் கூறவோ, மறுத்துப் பேசவோ வேண்டிய அவசியமுமில்லை. அவ்வாறு நாம் என்றும், உள்ளதை இல்லையென்று செப்பும் விதண்டாவாதத்தில் இறங்கினதும் கிடையாது.

அழகுவல்லியின் இலட்சணத்தை நாம் என்றும் காணத் தவறியதுமில்லை; ஒப்பாமல் எதிர்ப்புச் செய்ததுமில்லை.

ஆனால், அவ்வழகு மெல்லியலாளின் கூடா ஒழுக்கத்தால், கணத்துக்குக் கணம் கணவனை மாற்றிக்கொள்ளும் கீழ்மைக் குணத்தால், அவள் பிறந்த குடிக்கு ஏற்பட்டு விட்டக் கறையை நாம் எடுத்துக் காட்டுகிறோம். அவள் செயலால் மாதர் குலத்திற்கு உண்டாகிவிட்ட மாசை மனம் நொந்து சொல்லுகிறோம். குல நாசத்திற்கு, அவள் போக்கு எவ்வாறு துணை நிற்கிறது, 'காணீர் ஜகத்தீரே' எனக் கதறுகிறோம். அவள் அநாகரீகத்தையால் சிறந்து விளங்கிய இனம், தன் தனிப் பெரும் சிறப்பிழந்து, பிறர் ஏச்சுக்கும் பழிச் சொல்லுக்கும் பலியாகிப் பாழ்பட்டுத் தாழ்வுற்றுக் கிடக்கிறதை 'காணீர் கருத்துடையோரே' எனக் கோவெனக் குமுறுகிறோம்.

இந்த நமது மனப் புயலைக் கண்டு சிலர், நாம் காணும் குறைபாடுகளுக்குப் பரிகாரம் கூற முடியாத கதியற்ற நிலையில், நமது வாயுரையின் உண்மை அறியாதவர்போல் நடித்து, 'அவள் அழகைப் பார், அவள் சடையைப் பார், அன்ன நடையைப் பார், மெல்லிய பூங்காற்றில் அவள் தேகம் அசைந்தாடும் அற்புதத்தைப் பார்,' என, நமக்கு மறுப்புக் கூறுவதாக எண்ணிக்கொண்டு, தங்கள் அறியாமையையும், குதுமதியையும் வெளிப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

அந்த அழகி கொடுத்த சுகமும், காட்டும் ஆசையும் மோகனப் பார்வையும்தான் இந்தக் கலா ரசிகர்களுக்குப் பெரிதாகத் தெரிகிறதேயல்லாது, அதனால் மாதர் உலகம் கற்பிழந்து இழிநிலை பெற்றதும், புகழ் மணக்க வாழ்ந்த சமுதாயம் வீழ்ச்சியுற்றுக் கிடப்பதும், இவர்களுக்குப் பெரிதாகப் படவில்லை இவர்கள் வெறும் கலா ரசிகர்கள்தானே? சமுதாய நலனை அவர்கள் ஏன் பெரிதாக எண்ணப்போகிறார்கள்? அவர்களிடம் நாம் அதை எதிர்பார்ப்பது, கர்த்தபத்திடம் குயிலிசையைக் கேட்க விழைவதற்கே ஒப்பாகும்!

அழகிதான்—அவனியில் எங்கும் காணக் கிடைக்காதப் பொன்னவிர் மேனியாள்தான்—இருந்தால் என்ன? மாதர் குல மாணிக்கமாக இல்லையே அவள்! வெறும் விபசாரி! விலைமகள்!

அதுபோன்றதுதான் கம்பன் கவி — இராமாயண காவியம்!

கம்பன் கவிதையிலே பொருள் இருக்கிறதா இல்லையா?—வாதிட என்றும் நாம் நினைத்ததில்லை.

கவிநயம் உண்டா இல்லையா?—மனதாலும் தீண்டியதில்லை இவ்விதண்டாவாதத்தை!

கம்பன் தமிழ்க் கவியில் தலைசிறந்தவனா இல்லையா?—ஏதும் அறியாதவன் என எண்ணி நகையாடினதில்லை என்றும் நாம்!

நாம் கம்பனிடம் கண்ட குற்றமெல்லாம், காணும் களங்கமெல்லாம் திராவிட நாகரீகத்தையும், கலாசாரத்தையும், பண்பாட்டையும், ஆரிய கலாசாரத்திற்குத் தாசானுதாசனாக்கிவிட்டான் என்பதேயாகும். இந்த இன துரோகத்திற்கு, அவன் பெற்ற பரிசு, 'மகா கவி' என்ற சிறப்புப் பெயராகும். ஆனால், அவனைப் பெற்றெடுத்துப் பெரியோனாக்கிவிட்டச் சமுதாயத்திற்கோ, அவன் செய்த கைம்மாறு, அந்தச் சமுதாயம் என்றென்றும் தலைதூக்க முடியாமல் ஆரியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்க, தனது இராமாயண காவியம் மூலம் ஏற்பாடு செய்து வைத்திருப்பதுதான்.

அவன் செய்த காவியம் அவனுக்குப் புகழைக் கொடுத்திருக்கிறது; புவியாசர் போற்றுதலைக் காணிக்கையாக்கி இருக்கிறது. அந்தக் காவியத்தினால் ஏற்பட்ட விளைவு, திராவிட சமுதாயத்திற்கு நிரந்தர அடிமைத்தனத்தைச் சாசனமாக்கி இருக்கிறது.

இது வேதனை தரும் விசித்திரம். இதை நாம் எடுத்துக் கூறினால், கோபிக்கின்றனர் தமிழ்க் கலைவாணர்கள்! கவி கற்றவர்கள் மட்டுமா நம்மீது சீறுகின்றனர் என எண்ணுகின்றீர்கள்?

கவி என்றதும், 'என்ன விலே, படி?' எனக் கேட்கும் எழுத்தாளர் சிலரும், மீசை அடிக்க, பற்களைக் கடித்துத் தூளாக்கும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்! வான்கோழி வகை வந்த விசித்திரப் பிறவிகள்!

ஆரிய குல சிரேஷ்டர், சச்சிவோத்தம சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள், கம்பன் செய்த வம்பு என்ன என்பதை, அண்ணாமலை நகரில், பல 'புகழ் பெற்ற' எழுத்தாளர் முன்னிலையில் ஆதாரபூர்வமாகத் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

ஆரிய காதையை தம்மினத்ததுபோல் பாவித்து பாடிக் கொடுத்தக் கம்பனின் இராமாயணத்தை அய்யர் புகழ்ந்த போதிலும், அந்த இராமாயண காலத்திற்குப் பிறகு, தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றத்தை மறைக்காமல் எடுத்துக் காட்டுகிறார். அதற்கு முன்பாகவே தமிழில் சிறப்பான பல காவியங்கள் இருந்ததையும் அய்யர் ஒப்புகிறார்.

அத்துடனும் அய்யர் நில்லாமல், பிற இனத்தின் கேடான கோட்பாடுகளைத் தனதாக்கிக் கொள்ள கம்பன் இராமாயணம் இயற்றுவதின் மூலம், இனத்திற்குச் செய்த மகத்தான துரோகத்தைத் 'தமிழ் உணர்வு' எனவும் சிறப்பித்துப் பேசுகிறார்! ஏன் பாராட்டிப் பேசமாட்டார் அய்யர்? இப்பொழுதும் கம்பர் போன்ற பல 'டேலிகேட்'டுகள் இருந்துவரும்பொழுது, அய்யரின் கண்ணும் கருத்தும் களிப்புற்று பூரிப்பதிலே வியப்பு ஏது?

'ஆரியராவது, திராவிடராவது?' என்று பிதற்றித் திரியும் பெரியவர்களும், 'ஆரிய கலாசாரமும் இல்லை; திராவிட கலாசாரமும் இல்லை; எல்லாம் கிறித்துவப் பாதிரிகள் கற்பித்தத் தொல்லை' என மனமறிய பொய் சொல்லித் திரிகிறார்களே, அந்த நயவஞ்சகர்களும், அய்யரின் உரையை ஒரு முறைக்குப் பன்முறை படித்துப் பார்த்துத் தெளிவு பெற வேண்டும்.

திராவிட கலாசாரத்திற்கு எடுத்துக்காட்டாகக் கண்ணகியையும், ஆரிய கலாசாரத்திற்கு எடுத்துக்காட்டாகப் பாஞ்சாலியையும் எடுத்துக்கொண்டு, இரு கலாசாரத்தின் அடிப்படையை ஆராய்ந்து பார்த்தாலே போதும், ஆரிய அடிவருடிகள் நல்லறிவு பெறுவதற்கு!

கம்பனுக்கு முன்னதாக கற்புத் தெய்வம் கண்ணகிக்கு எனத் தமிழ்ப் பெரும் காவியம் உருவாகி இருக்க, கம்பன் தோன்றினதற்குப் பின்னர், 'ஐவரின் தேவி' பாஞ்சாலியின் கதை வில்லி பாரதமாகத் தமிழ் மொழியைக் கறைப்படுத்தி இருப்பது கருதத்தக்கது.

இலக்கியத் துறையில் ஏற்பட்ட இம்மாற்றம்தான், திராவிடர் வாழ்க்கைத் துறையிலும் நாசத்தைத் தூவிவிட்டிருக்கிறது. கம்பன் செய்த வம்பு இதுதான்! இதைத்தான், அய்யர் புகழ்ந்து போற்றுகிறார்! தங்களுக்கு ஏற்றம் தேடித் தந்த எதைத்தான், எவர்தான் பாராட்டிப் பேசாமல் இருந்துவிடுவர்? எனவே, அய்யர் பாராட்டுதல் எதிர்பார்க்கக் கூடியதே!

புள்ளிமானின் அழகு, மானினத்திற்குத் தெரியலாம்! ஆனால், அதைக் கொன்று தின்னும் புலிக்கூட்டத்திற்கு மானின் உடலில் மேவிய புள்ளிகளின் அழகா தெரியும்? அவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமே என்ற கவலை தான் புலிக் கூட்டத்திற்கு ஏற்பட நியாயமுண்டா?

புள்ளிமான் தன்மை கண்டு, மானினம் பூரிப்படைவது போலவே, புள்ளிமானின் இறைச்சியின் சுவை கண்டு புலிக் கூட்டம் பூரிப்படையத்தானே செய்யும்? ஆனால், மானினமோ, தங்கள் நிலை கண்டு இரத்தக் கண்ணீர் சொரியும்! இதுபோன்றே, மானின் புலால் தரும் நலங் கண்டு புலிக் கூட்டம் ஆனந்தக் கண்ணீர் பொழியும்! கம்பனின் ஈனச் செயலை, சர். சி. பி இராமசாமி அய்யர் பாராட்டிப் பேசுவது எந்தவகையான நியாயத்தைச் சேர்ந்தது என்பதை, முடிவுகட்டும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம்.

"விரோதமாக ஓட் அளிப்பேன்!"

நியூயார்க், ஏப். 13—

"இந்தியா, சீனா, செக்கோஸ்லோவியா ஆகிய மூன்று தேசங்களையும் சேர்த்துக்கொள்ளாவிட்டால் படை குறைப்புப் பற்றி ஐந்து வல்லரசு பேச்சு நடத்த வேண்டுமென்ற பிரிட்டிஷ் பிரேரணைக்கு விரோதமாக வோட் அளிப்பேன்" என்று ஐ. நா. கமிஷனில் சோவியத் பிரதிநிதி ஷ்விரன்கி கூறினார்.

ஜெனீவா மாநாடு

ஹாங்காங், ஏப். 19—

ஜெனீவா மாநாட்டுக்குச் செல்லும் சீனத் தூதுக் குழுவிற்கு அயல் நாட்டு மந்திரி சூ யென்-லாய் தலைமை வகிப்பார் என்று தெரிகிறது.

* * *

சியோல், ஏப். 18—

ஜெனீவா மாநாட்டில் தென் கொரியா கலந்து கொள்ளுமென்றும், ஆனால் இம்மாநாடு சமாதான முறையில் கொரியாவை ஐக்கியப்படுத்தும் கடைசி முறையாக இருக்கவேண்டுமென்றும் தென் கொரிய சர்க்கார் அதிகாரி தெரிவித்தாராம்!

சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம்?

தொழிலாளர்கள் கோரிக்கை

கோலார், ஏப் 19—

கோலார் சாம்பியன் ரீப் தங்கச் சுரங்கத்தில் மே மாதம் 6-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் நடத்த தொழிலாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

கோலாரில் உள்ள மைசூர் சுரங்கத்திலும் வேலை நிறுத்தம் நடைபெறும் என்று தெரிகிறது இரண்டிலும் சேர்ந்து 11 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

1952-ம் ஆண்டு போனஸ் கொடுப்பது, சம்பள உயர்வு, பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வது முதலிய விஷயங்களில் தொழிலாளர் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாததால் வேலை நிறுத்தம் நடைபெறும் என்று தெரிகிறது.

* * *

பெங்களூர், ஏப். 19—

பத்ராவதி இரும்பு உருக்கு தொழிற்சாலை ஊழியர்கள் மே 11-ந் தேதி முதல் உள்ளிருந்தே வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

நார் பட்டுக்கு வரியில் சலுகை

மத்திய நிதி மந்திரி அறிவிப்பு

டெல்லி, ஏப் 19—

சென்ற மார்ச் பட்ஜெட்டில் புதிதாக நார்ப் பட்டு மீது விதிக்கப்பட்ட வரியில் சில சலுகைகளை நிதி மந்திரி தேஷ்முக் பாராளு மன்றத்தில் அறிவித்தார்.

9 தறிக்குள் வைத்திருக்கும் சொசைட்டிகளுக்கு வரியில்லை என்று இருந்த விதியை மாற்றி, '24' தறிகள் வரை வைத்திருக்கும் ஆலைகளுக்கு வரியிலக்கு உண்டு என்று கூறினார். இதோடு எக்ஸைஸ் வரியையும் (உள்நாட்டு வரி) மூன்றில் ஒரு பங்காக குறைத்து விட்டதாக அறிவித்தார்.

இந்தச் சலுகையினால் மொத்தத்தில் ஆண்டொன்றுக்கு 85 லட்ச ரூபாய்கள் வரிக்குறைவு ஏற்படுமாம்.

இந்த நஷ்டத்தை எப்படி ஈடு செய்வது என்பது குறித்துதான் யோசனை செய்துகொண்டிருப்பதாக தேஷ்முக் கூறினார்.

மோட்டார் உற்பத்தித் திட்டங்கள்

பரிசீலனை செய்ய அதிகாரி நியமனம்

டெல்லி, ஏப். 18—

இந்திய உபகண்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மோட்டார் கார் உற்பத்திசாலைகளை நேரில் பார்வையிட்டு அது சம்பந்தமான திட்டங்களை பரிசீலனை செய்ய தற்காப்பு இலாகா உதவி காரியதரிசி பி. டி. என். மேனன் என்பவரை இந்திய அரசாங்கம் நியமித்திருக்கிறது.

ஆண்டுதோறும் 10,000 கார்கள் தேவைப்படும் இந்தியாவில், "மோட்டார் இறக்குமதி வரி" குறைக்கப்பட்டால், இன்னும் ஒரு மடங்கு அதிகமான கார்கள் விற்பனை ஆகலாம் என்று தெரிகிறது.

இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கு இப்போது விலைக்கு விலை வரியாக வசூலிக்கப்படுகிறது. இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட மோட்டார் கம்பெனிகளும் எதுவும் உற்பத்தி செய்யும் கட்டத்திற்கு வர முடியாமல் நிற்கின்றன. காரணம், 'இறக்குமதி செய்யவேண்டிய பாகங்கள் அதிகம். அவைகள் அத்தனைக்கும் இரு மடங்கு விலையாகிறது.

கத்தோலிக்கர்—குருக்கள் நிலத் தகராறு

சர்க்கார் உத்திரவிற்கு எதிராக நீதி மன்றத் தீர்ப்பு

மதுரை, ஏப். 18—

1891-ம் ஆண்டு முதல் மதுரை நகருக்கு அருகாமையில் உள்ள 50 ஏகர் நஞ்சை நிலங்களை ரோமன் கத்தோலிக்க மிஷின் சொந்தத்தில் அனுபவித்துக் கொண்டு வந்தது அதன் வருமானத்தைக் கொண்டு, செண்ட் மேரி உயர்நிலைப் பள்ளியை ஆர். சி மிஷன் நடத்தி வந்தது

அந்த 50 ஏகர் நஞ்செய் நிலமும் தங்களுக்குச் சொந்தமானது என, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் குருக்கள்மார்கள் சர்க்காருக்கு மனுச் செய்து கொண்டனர். அம்மனுவின் மீது, தாம் இதுவரை அனுபவித்து வந்த 50 ஏகர் நஞ்செய் நிலத்தை குருக்களிடம் ஒப்படைத்துவிடவேண்டுமென சர்க்கார் கட்டளை பிறப்பித்துவிட்டது.

சர்க்கார் உத்தரவை எதிர்த்து கத்தோலிக்க மிஷன் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. மிஷனுக்குச் சாதகமாக, வழக்கை விசாரித்த நீதிபதி தீர்ப்பளித்து இருக்கிறார்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன் (6-4-54) இதழ்த் தொடர்ச்சி	26484—1—5
கோவை மாவட்ட தி. மு கழகச் சார்பில் தூத்துக்குடி நிதிக்காக வசூலித்த தொகையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் மூலம் :—	
திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம்	100—0—0
கோவை - ஈரோடு பொதுக் கூட்ட வசூல் :—	
கோவை முத்தமிழ் வளர்ச்சி மன்றம்	5—0—0
,, ஸ்டேன்ஸ் மில் தொழிலாளர்கள்	7—0—0
,, எம். கே. அழகிரி	1—0—0
,, என். பாட்சா, ஏ கே பகதூர்	1—0—0
,, கணபதி டெக்ஸ்டைல் தொழிலாளர்கள்	5—2—0
,, நகைக்கடைத் தொழிலாளர்கள் சார்பில், ஆர். எஸ். மாரியப்பன், பி. யு. சின்னராசு மூலம் வசூல் :—	
ஆர். எஸ். மாரிபப்பன்	2—4—0
கே ஜி பகவதி	2—4—0
பி. யு. சின்னராஜ்	2—4—0
எம். திருவேங்கடம்	2—0—0
ஆர். எஸ். ஆறுமுகம்	2—0—0
ஆர். பழனியப்பன்	1—0—0
வி. கே. நடராசு	1—0—0
என். கே. ஆர். தம்பி	1—2—0
சங்கராச்சாரி	1—2—0
வி. நடராசு பிரதர்ஸ்	1—4—0
ஏ. ஜி ராமச்சந்திரம்	1—0—0
என். ஆறுமுகம் செட்டியார்	1—0—0
ஆர். ராமசாமி	1—0—0
காளிமுத்துகவுண்டர், கோபால், மவுனகுருசாமி, கந்தசாமி, அப்துல்கரீம், மூர்த்தி, நடராசு, ராமசுப்ரமணியம், வரதராசு, மாணிக்கம், செல்வமணி, கிருஷ்ணசாமிப்பிள்ளை, தட்சணாமூர்த்தி, சக்கரை, கண்ணன்	6—6—0
சேலம் அன்னதானப்பட்டி தி. மு. கழகம்	1—0—0
ஈரோடு பரமசிவம்	1—0—0
ஊத்துக்குளி சண்முகம்	1—0—0
பாரூர் தி மு கழகம்	1—0—0
ஈரோடு டெக்ஸ்டைல் தொழிலாளர்கள்	5—8—0
பெரியக்ரகாரம் இப்ராகிம்	1—0—0
மஞ்சடஞ்சாவடி கே. பி. எம். குப்புசாமி	2—0—0
பெரியசாமி, மாதேஸ்வரன், கிருஷ்ணன், குருசாமி ஆகியோர்	1—0—0
பா. ஈ. புதூர் தி. மு. கழகம்	5—0—0
கோவை கணபதி	1—9—3
கோவை—ஈரோடு பொதுக்கூட்டத்தில் காசு மாலைகள் மூலம்	27-14—9
கோவை நகர தி மு. கழகம்	200—0—0
சத்தியமங்கலம் தி. மு. கழகம்	15—0—0
புஞ்சைப் புளியம்பட்டி தி. மு. கழகம்	15—0—0
காளீஸ்வரா மில் தோழர்கள்	8-10—0
கோவை தாளமுத்து-நடராசன் படிப்பகம்	7—0—0
தொட்டப்பாளையம் தி. மு. கழகம்	5—0—0
புலியகுளம் தி. மு. கழகம்	5—0—0
கணபதி வள்ளுவர் படிப்பகம்	5—0—0
கலையாலூர் தி மு. கழகம்	3—8—0
சிங்காநல்லூர் தி. மு கழகம்	3—0—0
சூலூர் எஸ். என். அற்புதசாமி	2—0—0
பாப்பநாய்க்கன் முற்போக்குப் பொறியாளர்	1—8—0
நீலகிரி ராப்ராய் எஸ்டேட் தி. மு. கழகம்	2—0—0
சினிமா தொழிலாளி	1—0—0
மேட்டுப்பாளையம் கு. நடராசன்	1—0—0
14-வது வட்டாரம் நெசவுத் தொழிலாளர்	1—0—0
பொள்ளாச்சி சா. கோபால்	1—0—0
கிருஷ்ணன் குட்டி	2—0—0
காதக்கோட்டை தி. மு கழகம்	3—8—3
கோவை எஸ். ஏ ராசமாணிக்கம்	2—0—0
,, எஸ். டி. சிதம்பரம்	3—0—0
,, சி. ஆறுமுகம்	2—0—0
,, என். எஸ் முத்துக்குமார்	1—0—0
,, பெ. கிருஷ்ணமூர்த்தி	1—0—0
பொள்ளாச்சி ஜெயகோகன்	2—0—0
,, என். துரைராஜ்	1—8—0
,, திருமூர்த்தி	5—0—0
,, பாலசுப்ரமணியம்	1—0—0
,, அ சுல்தான்	1—0—0
,, கே. ரகுபதி	1—0—0
,, பொ. வ. ராதா	1—0—0
,, வெங்கடகிருஷ்ண ஆச்சாரி	1—0—0
சூலூர்	1—0—0
ஆர். அழகிரிசாமி	1—0—0
சுந்தரம் ஜிவல்லர்மார்ட் தொழிலாளர்கள்	1—8—0
சொக்கு செட்டியார்	1—0—0
மாரியப்பன், சாமிநாதன், ராமகிருஷ்ணன், கந்தசாமி, நாராயணசாமி, திருவேங்கடம், சின்னதுரை தங்கவேல், ஜேவியர், சுப்பையன், சுப்பையா, லக்ஷ்மணன், அர்ச்சுனன், பிலிப், ராசு, மாரியப்பன் ஆகியோர்	6-13—0
குள்ளக்காபாளையம் தி. மு கழகம்	1—4—0
சமூத்தூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்	1—0—0
20—12—'53 பொள்ளாச்சி பொதுக்கூட்ட வசூல்	9—9—3
மேற்படி கூட்டத்தில் காசு மாலை	1—3—9
27—12—53 சேலம் பொதுக் கூட்டத்தில் தோழர் சம்பத் அவர்களிடம் அளித்தவை :—	
கே. ஆர். சித்தன்	1—0—0
மாரியப்பன்	2—0—0
அனுகுண்டு ஆறுமுகம்	1—0—0
அன்னதானப்பட்டி தி. மு கழகம்	1—0—0
பி எம். கோபால்	1—0—0
ஆர். டி பழனிச்சாமி	5—0—0
ராமசாமி. வி கே சித்தையன்	1—8—0
பொன்னுசெட்டி, ராசன்	1—0—0
கிச்சிப்பாளையம் ம. து. மாரியப்பன்	1—9—0
கந்தப்பட்டி ஊராண்மைக் கழகத் தலைவர் எஸ். குள்ளமாரப்பன்	5—5—5
கோவை சோமசுந்தர மில் தொழிலாளர்கள் ;—	
என். நாராயணன்	1—0—0
முத்துசாமி	1—0—0
ராஜகாயகம்	1—0—0
ஜோசப், மாரியப்பன், ஜெகநாதன், ராமசாமி, பரமசிவம், மாரியப்பன், மகேஸ்வரன், ராமசாமி, எஸ். ஆர். ராமசாமி, அஜீஸ்பாய், சின்னப்பன், ஜெயராஜ், இமாம் சாயபு, கே. ஆர் ராமசாமி, மருதாசலம், சின்னசாமி ஆகியோர்	7—0—0
கோவை இரா. வெங்கடாசலம்	2—0—0
ரங்கநாதன்	1—0—0
அ. பாலசுப்ரமணியம்	1—0- 0
தி. க. சிவஞானம்	1—0—0
அ. கா. க. குழுவினர்	1—8—0
கோ. மு சங்கரன்	1—8—0
எஸ். ஆறுமுகம்	2—0—0
அ. வரதராசன்	1—0—0
எஸ் டி. பட்டாபி	2—0—0
சுதர்சனம்	1—0—0
சென்னை-1. சி எஸ். சுந்தரம்	2—0—0
தோழர் என். எஸ். இளங்கோ மூலம்;—	
திருவாரூர் தி மு. கழகம்	15—0—0
எட்டிமங்கலம் தி மு. கழகம்	3—2—0
சென்னை பர்மா-ஷெல் தோழர்கள் அன்பளிப்பு—தோழர் எஸ். ராமலிங்கம் அவர்கள் மூலம்	13-12—0
ஆகமொத்தம் ரு	27,034—2—1

காங்கிரஸ் குண்டர்கள் கைவரிசை!

தி மு கழகக் கொடிகளைக் கிழித்தெறிந்தனர்

விருத்தாசலம் ஏப். 20—விருத்தாசலம் வழியாக சிதம்பரத்திற்கு நேரு செல்வதை முன்னிட்டு, 15—4—54 இரவு 7-45 மணிக்கு விருத்தாசலம் கடைவீதி காது ரோட்டு சந்திப்பிலும், பாலக்கரை கீழ்புறத்திலும் தி. மு. க. கொடிகள் மாதத்தில் பறந்து கொண்டிருந்தது. அதை சில காங்கிரஸ் குண்டர்கள் பாலக்கரை கீழ்புறமுள்ள கொடி மரத்தை வெட்டிக் கீழே சாய்த்து, கொடியைக் கிழித்தெறிந்தும், கடைவீதியிலுள்ள கொடியை இறக்கிக் கிழித்தெறிந்தும் விட்டனர். இதுபற்றி, தி. மு. கழகத்தினர் போலீசில் புகார் செய்தனர். போலீஸ் அதிகாரிகள் சென்று சில காங்கிரஸ் குண்டர்களை ஸ்டேஷனுக்கு அழைத்துவந்து, 'அழைக்கும் போது வருகிறோம்' என்று முச்சலிக்கையில் கையொப்பம் வாங்கிக் கொண்டு அனுப்பினர்.

ஒடிந்த கழிகள், கிழித்த கொடிகளைப் போலீசார் கைப்பற்றி வைத்திருக்கிறார்கள்.

நேரு போகும்வரை அனுமதல் இருப்பதாகவும், பின்னர் அவர்கள் மேல்நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் போலீஸ் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

கழகச் செய்திகள்

★

கள்ளக்குறிச்சி (தெ. ஆ.) தி. மு. கழகம்

தோழர் ஜே. எச். பகதூர் தலைமையில் கழக செயற் குழுக் கூட்டம் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கே. வேலாயுதம்; துணைச் செயலாளர்: டி. முனுசாமி; பொருளாளர்: ஜே. எச். பகதூர்; மாவட்ட உறுப்பினர்: வை. துரைசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: ராதா, ஏ. கண்ணன், சம்பந்தம், வகாப், சக்கரை, ஏ. கந்தன், சங்கரன்.

பிறையாறு வட்ட தி. மு. கழகம்

28—3—54-ல், தோழர் சி. ஜெம்பு தலைமையில் நடைபெற்ற பிறையாறு வட்டார தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் எம். என். இராய், வி. வி. தனுஷ்கோடி, அருப்புக் கோட்டை முத்து ஆகியவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், பிறையாறு, தரங்கம்பாடி, சந்திரப்பாடி, கொட்டுப்பாளையம், ஒழுகைகர் ஆகிய ஊர்களில் உள்ள கழக உறுப்பினர்களைக் கொண்டு பிறையாறு கழகம் இயங்கவும், பிரெஞ்சிந்தியப் போராட்டத்தை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்புகலூர் தி. மு. க.

18—4—54 மாலை 6 மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் ம. சா. முத்தமுகன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். ஆர். சாமியப்பா, நீலமேகம் தமையனார், திருச்சி சங்கரன் ஆகியவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், தஞ்சை மாவட்ட மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித் தந்த வரவேற்புக் குழுவினருக்கு நன்றியைத் தெரிவிக்கப்பட்டது.

சென்னப்பநாயக்கன்பாளையம் தி.மு.கழக துவக்க விழா பொதுக்கூட்டம்

19—4—54 மாலை துவக்க விழாவை யொட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழர் சாமிநாதன் தலைமை வகித்தார். தோழர்கள் என். வி. நடராசன், இரா. இளம்வழுதி, மற்றும் பல தோழர்கள் தி. மு. கழகத்தின் மும்முனை போராட்டங்கள் பற்றி விளக்கிப் பேசினர்.

"தமிழ்ச் செல்வி"

—○—

பம்பாய், ஏப். 30—மாதுங்கா தி. மு. கழக உறுப்பினர் தோழர் எஸ். டி. அகஸ்டின்—தோழியர் மேரி அமல் அவர்களது பெண் மகவிற்குப் பெயர் சூட்டு விழா 4—4—54 மாலை 6-மணிக்கு தோழர் தொல்காப்பியனூர் தலைமையில் நடைபெற்றது. மகவிற்கு 'தமிழ்ச் செல்வி' எனப் பெயரிடப்பட்டது. இசை, நடனம், தேனீர் விருந்துக்குப் பின் 'தோழர்கள் 'தமிழ்ச் செல்வி'யை வாழ்த்திப் பேசினர். தோழர் எஸ். டி. அகஸ்டின் நன்றி கூறினார் இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரு 5 அன்பளிப்பு வழங்கப்பட்டது — வரப்பெற்றோம்— நன்றியுடையது — பொறுப்பாளர்.

ராகி சாகுபடி மதிப்பீடு

புதுடில்லி, ஏப். 20—நடப்பு ஆண்டில், ராகி சாகுபடி விஸ்தீரணம் 54,72,000 ஏக்கராவும் உற்பத்தி அளவு 12,38,000 டன்னுமாக இருக்குமென்று தெரிய வருகிறது.

செய்திச் சுருள்

★

'கொலைக்களம்' நாடகம்

புதியம்புத்தூரில் அமைந்துள்ள இளைஞர் தி. மு. கழக கலைமணி நாடக மன்றத்தாரால் 11—4—54 இரவு பத்திரகாளியம்மன் கோவில் முன்பு அமைந்துள்ள வி. வி. டி. அரங்கில் குளத்தூர் தோழர் மாரியப்பன் தலைமையில், "கொலைக்களம்" என்னும் நாடகம் நடைபெற்றது. நாடக ஆரம்பத்தில் தலைவர் தம் தலைமையுரையில் திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தி சொற்பொழிவாற்றினார்.

ஆதீனகர்த்தர்—பெரியார் சந்திப்பு

ஈரோடு, ஏப். 18—பெரியாரும்—திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகளும் இங்கு என். செங்கியப்ப முதலியார் வீட்டில் நடைபெற்ற ஒரு விருந்தில் கலந்துகொண்டபோது சந்தித்து மதம், புராணம் இவைகள் பற்றி 1 மணி நேரம் விவாதித்தனராம்! மீண்டும் சந்திக்கலாம் என்று தெரிகிறது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்

பிள்ளாதுரை, ஏப். 16—16—4—54 காலை 9 மணிக்கு பிள்ளாதுரை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி அண்டு விற்பனை சங்க லிமிடெட் திறப்பு விழா தோழர் ம. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, திருவாளர்கள் பி. இராமன், ஆர். சாமி, ஏ. வரதன், ஆகியோர் நெசவாளருக்குச் செய்யக் கூடிய நன்மையையும், நிதி வசதியின் தேவை பற்றியும் பேசினார்.

வ. உ. சி. மார்க்கெட் வியாபாரிகள் சங்கம்

சேலம், ஏப். 20—16—4—54-ல், திரு. வேணு கோபால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பிரெஞ்சிந்தியப் போராட்டத்தை ஆதரித்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கம்

தாராவி, (பம்பாய்) ஏப். 19—12—4—54-ல், தோழர் அய்யாசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சங்க வரவு-செலவு கணக்கும், கடிதப் போக்குவரத்தும் கவனிக்கப்பட்ட பின்னர், நான்குனேரி தாலுகா கருப்புக் கட்டி கிராமத்திலுள்ள ஆதிதிராவிட மக்களை இம்சிக்குள்ளாக்கினவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்கும்படி சென்னை மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் மற்றும் சில முடிவுகளும் செய்யப்பட்டு கூட்டம் முடிந்தது.

திருநெல்வேலி ஆதிதிராவிட மகாஜன சங்கம்

பம்பாய், ஏப். 14—பம்பாய்க் கிளையின் நிர்வாகக் குழுக் கூட்டம் 11—4—54ல், தோழர் மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்கு, கடிதப் போக்குவரத்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் பல விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

மறைவு

வலங்கைமான் தி. மு கழகச் செயலாளர் ஏ. கோவிந்தராசன் அவர்களது இளைய பெண் குழந்தை அருள்மொழி 20—3—54ல் இயற்கை யெய்தியதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்லக்குடி வழக்கு அப்பீல்

உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு கண்ணதாசன் குழுவினரை விடுவிக்கக் கட்டளை

சென்னை, ஏப். 20—

சமீபத்தில் திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட்டால் இ. பி. கோ. 147, 332 பிரிவுடன் படிக்கப்பட்ட 34-வது பிரிவு, 149-வது பிரிவு, ரயில்வே சட்டம் 128-வது பிரிவு ஆகியவைகளின்கீழ் ஒரு ஆண்டு முதல் 18 மாதம் வரை பல்வேறு சிறை தண்டனை விதிக்கப்பட்ட தோழர்கள் கண்ணதாசன், வடிவேலு, கே. சண்முகம், தஸ்தகீர், ரங்கராஜன், துரைராஜன், குசை, முனுசாமி, ஏ. பி. நிமலன், வி. எஸ். சதாசிவம், ஐ. எம். ஷெரீப், ராதாகிருஷ்ணன், ராமதாஸ், மங்காருசாமி, பிச்சை, கருமலை, ஏ. பி. தர்மலிங்கம், தம்புசாமி ஆகியவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட கிரிமினல் ரிவிஷன் மனுவை சென்னை ஐகோர்ட் நீதிபதி டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு இன்று ஏற்றுக்கொண்டார்.

கடந்த ஆண்டு ஜூலை 15-ந் தேதி கல்லக்குடியில எதிரிகளால் இந்தக் குற்றங்கள் செய்யப்பட்டதாக பிராஸிகியூஷன் தரப்பு வழக்கு.

தோழர் கண்ணதாசன், மற்ற 17 பேர்களையும் ரூ. 500 (பாண்டு) ஜாமீன் பேரிலும், 2 நபர் ஜாமீன் பேரிலும் விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்திரவிட்டார்.

மனுதாரர்கள் சார்பில் அட்வகேட் நாராயணசாமி அவர்களும், எம். டி. சுந்தரமும் ஆஜரானார்கள்.

அமெரிக்கா-பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தம்

கிழக்கு வங்க எம்.எல்.ஏ.-க்கள் எதிர்க்கின்றனர்

டாக்கா, ஏப். 21—

"பாகிஸ்தானின் ஆள் பலமும், வசதிகளும் அமெரிக்கர்களின் யுத்த சதிக்குப் பலியிடப்பட்டுவிடும்; பாகிஸ்தானின் சுதந்திரம் பறிபோகும்; பாக்—அமெரிக்கா ஒப்பந்தத்தைத் தாமதமின்றி ரத்து செய்ய வேண்டும்; கிழக்கு வங்க மக்கள் அதைப் பலமாக எதிர்க்க வேண்டும்,"

—என்று, அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் இராணுவ உதவி பெறுவது பற்றி கிழக்கு வங்க அசெம்பிளி அங்கத்தினர்கள் 309 பேர்களின் பலதரப்பட்ட கட்சிகளைச் சேர்ந்த 162 அங்கத்தினர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

வங்காளி மொழி எதிர்ப்பு இயக்கம்

மேற்கு பாகிஸ்தானில் உருவாகிறது?

கராச்சி, ஏப். 20—

வங்காளியைப் பாகிஸ்தானின் அரசாங்க மொழியாக முஸ்லிம் லீக் கட்சி ஏற்றிருப்பதை எதிர்த்து இங்கு ஒரு இயக்கம் உருவாகியிருப்பதாயும், கராச்சி நகரசபை இம்முடிவை கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாயும், அம்முடிவை ரத்து செய்து உருதுவை தேசிய மொழியாக்காவிடில் அபாய விளைவுகள் ஏற்படும் என்று நகரசபை மெம்பர்கள் எச்சரித்திருப்பதாகவும் தெரிகிறது.

சென்னை, ஆந்திரா, மைசூர் எல்லைகள்

மாறுதல் செய்ய மாநாடு?

புதுடில்லி, ஏப். 20—

சென்னை, ஆந்திரா, மைசூர் மாநிலங்களின் எல்லைகளில் சொற்பமான மாறுதல்கள் செய்வதற்கு, அந்த மூன்று மாநிலங்கள் கொண்ட மாநாடு பயன்படுமானால், அம்மாநாட்டைக் கூட்டுவதற்குத் தயாராக இருப்பதாகவும், இதுபற்றி அம்மூன்று மாநிலங்களுக்கும் தெரிவித்திருப்பதாகவும் மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி கட்ஜூ தெரிவித்தார்.

ஆந்திர அதிகாரிகள் 'நிர்ப்பந்தம்' ரத்து!

திருத்தணி தமிழர்கள் வெற்றி

சென்னை, ஏப். 20—

சித்தூர் மாவட்டம், திருத்தணி தாலூகாவில் அம்மலார்குப்பம் முதலிய சில இடங்களில், தமிழ் வியாபாரிகள், தமிழில் விற்பனை வரி கணக்குகள் வைக்கக்கூடாதென்றும், ஆங்கிலம், தெலுங்கு அல்லது இந்தியில் தான் கணக்குவைத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஆந்திர அதிகாரிகள் உத்திரவிட்டிருந்ததை, ஆந்திர சர்க்கார் ரத்து செய்துவிட்டனர். முன்போல் தமிழிலேயே கணக்கு வைத்துக் கொள்ளலாம் என்றும் உத்திரவிடப்பட்டுள்ளது.

சென்னை சட்டசபை கூட்டம்

மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணிவரை நடைபெறும்

காமராசர் மந்திரி சபை குழு பதவியேற்ற பிறகு, சென்னை சட்டசபையின் முதல் கூட்டம் மே. 5-ந்தேதி காலை 11 மணிக்கு ஆரம்பமாகும். அதன் பிறகு, சட்டசபை கூட்டம் தினந்தோறும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9 மணிவரை நடைபெறும்.

சென்னை நகரசபை கடன் கோரிக்கை

சர்க்கார் நிராகரிப்பு

சென்னை, ஏப். 20—

நகரில், கக்கூசுகள் கட்டுவதற்காக சர்க்காரிடம் ரூ. 50,000 கடனாக சென்னை நகரசபை கோரியிருந்தது; தற்சமயம் உள்ள நிதி நெருக்கடியின் காரணமாக அக்கடனை வழங்க இல்லாத நிலையிலிருப்பதாக நகரசபை கமிஷனருக்கு சர்க்கார் அறிவித்துள்ளார்.

யாரைக் கண்டு யார் பயப்படுகின்றனர்?

உடனடி விளைவு பற்றி அமெரிக்கத் தற்காப்பு மந்திரி!

வாஷிங்டன், ஏப். 16—

"ரஷ்யர்களைக் கண்டு அமெரிக்கர்கள் அஞ்சுவதை காட்டிலும், அமெரிக்கர்களைக் கண்டு ரஷ்யர்கள்தான் அதிகமாகப் பயப்படுகின்றனர்; அனுகுண்டை எங்கள் மேல போட்டு ஒரு யுத்தத்தை ரஷ்யர்கள் ஆரம்பிக்கமாட்டார்கள்; ஏனெனில், அதன் உடனடி விளைவு என்னவாக இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்; ரஷ்யர்களின் ஆயுத பலம் தற்காப்புக்கு மட்டுமே பயன்படும்"

என்று, அமெரிக்க தற்காப்பு மந்திரி கூறியுள்ளார்.

டில்லி மக்கள் சபை உறுப்பினர் சம்பளம்

கூட்டுக் கமிட்டி சிபார்சு

புதுடில்லி, ஏப். 20—

இந்திய மேல்சபை மக்கள் சபை உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 300-ம், சபை நடைபெறும் காலங்களில் தினப்படி ரூ. 20-ம், அல்லது இப்பொழுது கொடுப்பதுபோல், சபை நடைபெறும் காலங்களில் தினப் படி ரூ. 40 கொடுக்கலாமென்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர்களின் மாதச் சம்பளத்திற்கு வருமான வரி விதிக்கலாமென்றும், ஆனால், தினப் படிக்கு இருக்கக்கூடாதென்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு 2-இரண்டாம் வகுப்பு டிக்கெட்கள், 1-மூன்றும் வகுப்பு டிக்கெட் கட்டணம் ஒவ்வொரு பிரயாணத்துக்கும் தரவேண்டுமென்றும், அல்லது ஒருதேகால் தனி விமானப் பிரயாணக் கட்டணம் கொடுக்க வேண்டும், இதைப் பணமாகக் கொடுத்துவிடவே கூடாதென்றும் கூட்டு பார்லிமெண்ட் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

செயற்கை பெட்ரோல்

நெய்வேலி பழுப்பு நிலக்கரி பயன்படும்?

புதுடில்லி, ஏப் 20—

நீண்ட காலத் திட்டங்களில் ஒன்றாக செயற்கை முறையில் பெட்ரோல் தயாரிப்பது பற்றி மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைகளைத் தவிர நெய்வேலியில் கிடைக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியிலிருந்தும் செயற்கை பெட்ரோல் தயாரிப்பது பற்றி பரிசீலனை நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகிறது.

வடநாட்டு எத்தர்கள் — வலையில் சிக்காதீர்!

சென்னை சர்க்கார் எச்சரிக்கை

சூயஸில் வெள்ளையர் கொல்லப்பட்டார்

எகிப்தில் தகராறு வளர்கிறது

கெய்ரோ, ஏப். 18—

சூயஸ் கால்வாய் பிரதேசத்தில் பாதுகாவல் புரிந்துவரும் வெள்ளை இராணுவ வீரர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்டும், ஒருவர் அப்புறப்படுத்தப்பட்டும் இருக்கின்றனர்.

எகிப்தியர்களின் 'தேசிய வெறிச் செயல்' இது என்று போர்ட்செட் செய்தியொன்று கூறுகிறது.

பிரிட்டிஷ் பாதுகாவல் லாரி ஒன்றின்மீது எகிப்தியர் மூவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த காரணத்தால் ஒரு பிரிட்டிஷார் காயப்படுத்தப்பட்டு, பின்னர் ஆஸ்பத்திரியில் மாண்டார் என்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

தனது வாழ்நாள் பற்றி ஜெயபிரகாஷ்!

சர்வோதயபுரி, ஏப். 19—

"சாதாரணமாக அரசியல் என்று சொல்கிறோமே அதிலிருந்து விலகி, எனது வாழ்நாள் முழுவதையும் பூதான இயக்கத்துக்கே செலவிட விரும்புகிறேன்; ஆனால், கட்சியிலிருந்து விலகும் நோக்கம் கிடையாது; ஏனெனில், உடனடியாக நான் கவனிக்க வேண்டிய சில அலுவல்கள் இருக்கின்றன; அதை நிறைவேற்றிய பின்னர், வாழ்நாள் முழுவதையும் பூதான இயக்கத்திற்குச் செலவிடுவேன்," என்று ஜெயபிரகாஷ் நாராயண் கூறியுள்ளார்.

'சர்க்கரை உற்பத்திக்கு வடநாட்டு தட்பவெட்ப நிலை ஒத்தில்லை'

'தென்னிந்தியாவிற்கு, உள்ள ஆலைகளை அகற்றுவதே உகந்தது'

நியூடெல்லி, ஏப். 20—

"சர்க்கரை உற்பத்திக்கு வடஇந்தியத் தட்ப வெட்ப நிலை உகந்ததாக இல்லை எனத் தெரிய வருகிறது. எனவே, சர்க்கரை உற்பத்திக்கு மிக ஏற்றதாக உள்ள தென்னிந்தியாவிற்கு, சர்க்கரை ஆலைகளைக் கடத்திவிடுவதே நன்மையானது என அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகிறேன்."

—என, சாரங்கதரதாஸ் எனும், ஒரிசா பி. எஸ். பி. கட்சி உறுப்பினர் மக்கள் சபையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு, சர்க்கரை உற்பத்தி 1951-52ம் ஆண்டிலேயே பெருகிவிட்டது என உரக்கக் கூவுகிறார்கள் அமைச்சர்கள்; ஆனால், கல்கத்தாவில் விலையோ மணு ஒன்றுக்கு ரூ. 6 ஆக சக்கரை விற்று வருகிறது எனக் குறிப்பிட்டார்.

"ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கினவர்களும், நிதி அமைச்சரும், செலவழிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள தொகை செலவழிக்கப்பட்டுவிட்டதா எனக் கணக்கிடுவதில் அக்கறை காட்டுகிறார்களே அல்லாது, செலவழித்தத்தொகை அளவிற்கு விளைவு இருக்கிறதா எனக்கணக்கிட்டுப் பார்த்து திட்டத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க மறுக்கிறார்கள். இது, டில்லி அரசாங்க அலுவலக மனோ பாவமாகும்."

உமாமகேஸ்வரர் கரணம் போட்டார்!

வடக்கநந்தலில் தேர் கவிழ்ந்தது

17—4—54 மாலை வடக்கநந்தல் உமாமகேஸ்வரர் தேர் ஊர்வலம் புறப்பட இருந்தது; தேர் இழுக்க மக்கள் யாரும் வரவில்லை. ஊர்காப்பாளரின் உதவியுடன் தர்மகர்த்தா அவர்கள் வீதி வீடாகச் சென்று மக்களை வலிய இழுத்து வந்து தேர் இழுக்க செய்தனர்.

கிழக்கு, தெற்கு, மேற்கு தெருக்களைக் கடந்து வடக்குத் தெருவில் சென்றவுடன் தேர் அடியோடு சாய்ந்துவிட்டது; ஆனால், உயிர்ச் சேதமோ, பொருட் சேதமோ இல்லை.

தேர் சாய்ந்து விட்டதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாமலிருக்க ஊர்ப் பொது மக்கள் கரணம் போட்டு விழுந்த உமாமகேஸ்வரரையும், அவரது தேரையும் சிரமப்பட்டு நிமிர்த்தி தக்க இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தனர். (ஒ. வி)

கழக முகவரி

திராவிட முன்னேற்றக் கழகம், 2-வது வட்டக்கிளை, அண்ணா அன்பு நிலையம், கடலூர் ஓ. டி.

சுற்றறிக்கை

சென்னை, ஏப் 20—

சென்னை சர்க்கார் குறிப்பொன்று கூறுவதாவது:—

வட இந்தியாவில் கம்பெனிகள் வைத்து நடத்துவதாகப் பொய் சொல்லி அதற்கான அமைப்பாளர்கள், விற்பனை பிரதிநிதிகள், சூப்பரின்டெண்டுகள் முதலிய உத்தியோகங்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளங்கள் முதலியன தருவதாகக் கூறிச் சிலர் ஏமாற்றி வருவது பற்றி இந்த மாநில மக்கள் உஷாராக இருக்கும்படி எச்சரிக்கை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இந்தப் பேர்வழிகள், இம்மாதிரி வேலைகளுக்கு, 'ஆட்கள் தேவை' என இந்தியாவிலுள்ள முக்கியமான பத்திரிகைகளில் பிரசுரம் செய்து மனுக்கள் கோருகின்றனர்.

ரொக்க ஜாமீன் தொகை பெற்றுக்கொண்டு, பின்பு, நியமன உத்தரவே அனுப்பாமலிருந்து விடுகிறார்கள்.

எனவே, கம்பெனிகளின் உண்மை நிலையை அறியாமல், யாரும் போலி கம்பெனியின் பங்குகளை வாங்க வேண்டாமென்றும். போலிக் கம்பெனிகளிடம் ஜாமீன் தொகை கட்ட வேண்டாமென்றும் பொது மக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.

வெங்கிடாஜலபதி பவனி வரவில்லை!

தடை உத்திரவு காரணம்?

சாத்தூர், ஏப். 18—

சித்திரா பௌர்ணமி அன்று சாத்தூர் வெங்கடாசலபதி சுவாமியை, கொல்லப்பட்டிக்குக் கொண்டுபோய் சித்திரா பௌர்ணமி நடத்துவது வழக்கம்.

இந்த ஆண்டு கொல்லப்பட்டி ஜமீன்தாருக்கும், அவ்வூர் வாசிகள் சிலருக்கும், சாத்தூரிலுள்ள சித்திரா பௌர்ணமி கமிட்டியில் சிலருக்கும் ஏற்பட்ட தகராறினால் பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று எதிர்பார்த்து கொல்லப்பட்டி ஜமீன்தாருக்கும், அவ்வூர் வாசிகள் சிலருக்கும், சாத்தூர் சித்திரா பௌர்ணமி கமிட்டி பிரசிடெண்டுக்கும் 17—4—54-ந் தேதி இரவு 12 மணி முதல் 20-4-54-ந் தேதி பகல் 12 மணி வரை சித்திரா பௌர்ணமி உற்சவ சம்பந்தமான ஏற்பாடுகளில் கலந்து கொள்ளக் கூடாது. என்று சாத்தூர்தாலுக்காமாஜிஸ்திரேட்டால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவால் சுவாமி வெங்கிடாசலபதி கோவிலைவிட்டு வெளியே பவனி வரவில்லை.

சமாதானத் தேவைகள்

அணுசக்தியைப் பயன்படுத்த ஆராய்ச்சி

வாஷிங்டன், ஏப். 21—

அணு சக்தியை சமாதானத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் முறைகளை ஆராய்ச்சி செய்ய பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சி ஸ்தாபனங்கள், தொழில் ஆராய்ச்சி சாலைகள் முதலியவைகளுக்கு 36 புது ஒப்பந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன என அமெரிக்க அணுசக்தி ஸ்தாபனம் கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகின் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குளிர் நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,